பொங்கல் மலர்

ஜப்பான் வாழ் தமிழ் மக்களின் பொங்கல் விழா

2013

Kuma Diagnostics and Laboratories Pvt. Ltd.

KUMA LABS

(Japanese Technology Medical Lab)

Main Lab: New no.7, Old no.4, Pappathiamal street, Jain Colony, Kodambakkam, Chennai-600024. Tamilnadu St. India.
Ph: 044 64513344,45, Mobile:7200073344.
Email ID:customercare@kumalabsindia.com
Web: www.kumalabsindia.com.

Festive Season Offer!
Valid upto 31 Mar2013

Highly Experienced Blood Testing Lab

PACKAGE 1 ₹500 /-

1. Fasting & PP Blood Sugar
2. Serum Urea
3. Serum Creatinine
4. Lipid Profile (Direct HDL & LDL)

PACKAGE 2 ₹700 /-

1. Fasting & PP Blood Sugar
2. Serum Urea
3. Serum Creatinine
4. Lipid Profile (Direct HDL & LDL)
5. Total Thyroid Profile (T3,T4,TSH)

PACKAGE 3 ₹900 /-

1. Fasting & PP Blood Sugar
2. Serum Urea
3. Serum Creatinine
4. Lipid Profile (Direct HDL & LDL)
5. Total Thyroid Profile (T3,T4,TSH)
6. Liver Function Test (LFT)

Chennai Collection Centres :

Adyar : No:18, Kesavan Enclave, Kasturiba nagar, Near Rajan eye care, Adyar, Chennai - 600 020.
Kodambakkam (HO): New no.7, Old no.4, Pappathiamal street, Jain Colony, Kodambakkam, Chennai-600 024 .
Mandaveli: New no.129, Old no.67, R.K.Mutt Road, Mandaveli, Chennai - 600 028.
Velachery: New No.3, Old No.7, Srinivasan St, Seethapathy Nagar Extn, Velachery, Chennai - 600 042.

Madurai Collection Centres :

S.S.Colony: : 22, Kannadasan main street,Near Ponmeni bus stop, City union bank opposite. Madurai – 625 010.

For Home Collection
SMS **HC** to 9042002222.
Ph: 044-47423310, 11,
Mobile: 72000 73344.

Call Centre :
Ph: 044-47423310, 11
Mobile No: 7200073344

5% Discount on using our online registration and scheduling services at www.kumalabsindia.com

Working Hours: Mon-Sat 7.00 A.M - 7.00 P.M Sunday 7.00 A.M - 12.30 P.M

தலையங்கம்

வணக்கம். இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

ஜப்பானியர் பின்பற்றும் சீன ஆண்டு அட்டவணையின்படி இந்த ஆண்டு பாம்பு வருடம். தோலை உரித்து தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ளும் பாம்பு மாற்றத்தின் குறியீடு. ஃபுகுஷிமா விபத்தைத்தொடர்ந்து வலுப்பெற்று வரும் அணு உலைகளுக்கெதிரான மக்கள் போராட்டம், சென்ற ஆண்டு இறுதியின் ஆட்சிமாற்றம் காரணமாக பின்னடையாமல் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் சார்ந்த தொழில்நுட்ப வளர்ச்சி, பொதுமக்களின் பாதுகாப்பு உத்தரவாதம் என்று முன்னேறும் என்று நம்பிக்கை கொள்வோம்.

பொங்கல் திருநாள் தமிழர்களின் முதன்மைத்திருநாள். கூதலான மார்கழியின் காலைப்பனியும் மறைந்து கதிரவன் கோலோச்சத்துவங்கும் தைத்திங்களின் முதல் நாள். பழந்தமிழ் சமூகத்தில் அறுவடைக்காலம். நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சிவிளையாடும் தஞ்சைத்தரணி இன்றோ தண்ணீருக்காக தவம் கிடக்கிறது. உச்ச நீதிமன்றத்திடம் வரம் கிடைத்தும் நாம் தவறவிட்டால் வருங்கால தலைமுறையினர் நம்மை மன்னிப்பார்களா? தைபிறந்தால் காவிரிக்காவது வழி பிறக்கட்டும் மடை திறக்கட்டும்.

பொங்கல் திருநாள் சூரியன் முதலான இயற்கைக்கு நன்றி கூறும் நன்னாள். தைமாதத்தில் தமிழ் நாட்டில் வெய்யோனின் ஆட்சிதான் என்றாலும் தோக்கியோவில் நமது பொங்கல் விழாவின்போது நாம் காண்பதோ வெண்பனியின் காட்சிதான். ஆம்..தோக்கியோவின் பொங்கல் பெரும்பாலும் ***வெண்பொங்கல்***தான். வெப்பமூட்டப்பட்ட அறையிலிருந்து வெளியே எட்டிப்பார்க்கும்பொழுது வெண்ணிறக்கம்பளம் விரித்த வீதிகள் கண்களுக்குக்குளிர்ச்சி தரும். ஆனால் வாசலைத்தாண்டி வீதியில் கால் வைத்தால் குளிர் காதை மூக்கை உறைய வைக்கும். பனி கத்தி போல தோலைக்கீறும். ஆனாலும் மெய்வருத்தம் பாராது நீங்களும் நீண்டதூரம் பயணித்து பொங்கல்விழாவில் பங்கு கொள்வீர்கள். அடாது பனிபொழிந்தாலும் விடாது பொங்கலில் பங்குபெறும் உங்கள் பேராதரவுதான் இந்த விழா இருபத்தாண்டுகள் தொடர்ந்து நிகழ்வதற்கான பெரும் உந்துசக்தி. வரும் ஆண்டுகளிலும் உங்கள் ஆதரவு பல்கிப்பெருகி இந்தக்கொண்டாட்டங்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பதே எங்கள் அவா.

ஒரு பத்தாண்டு கடந்து பதினொன்றாவது மலராக உங்கள் கரங்களை அலங்கரிக்கும் இந்த பொங்கல் மலரில் அறிவியல், புகைப்படம், திரைப்படம், திரையிசை, கர்நாடக இசை சமூகப்பார்வை, இலக்கியம், ஓவியம் என்று பல தளங்களில் படைப்புக்களம் விரிந்துள்ளது. பங்களித்து உதவிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். படித்து ரசித்ததை, படித்ததில் பிடித்ததை, நீங்கள் கண்ட நிறைகுறைகளை pongaljp@yahoo.com என்கிற இணைய முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

Tokyo to Palakkad

A P S Mani

Yes, it was a big leap forward (or backward) when we decided to move to India and in particular to settle in our ancestral village, Athipotta in Palakkad District after a cosy stay of 35 years in Tokyo. We moved to Tokyo for our love of Japan. I was very active in the Indo Japan Association in Mumbai years before I landed in Tokyo. Japan was my dream country.

My desire was fulfilled when I landed there in end of 1976. Pushkala and daughter (baby in arms) Bakirathi joined me three months later. Years following the initial year of settlement were fascinating. Pushkala & I formed an Indian Association by name Indian Community Activities Tokyo in end 1976. I started participating in many groups of foreigners, e.g., the YMCA – Foreign Community Supporting Community – the aim of which was to help handicapped children. Became a Director of another organisation by name, International Social Service which specialised in adoption of children for the needy. We could get Mother Teresa to visit Japan and establish the Missionaries of Charity in Japan. Mother told Pushkala that while the Sisters in the Missionary will look after the needy, it is her duty to look after the Sisters, when they needed. Most of the Sisters at that time were from India. Later I joined Foreign Chambers of Commerce, representing India as well became a member of the Japan Chamber of Commerce in its India Japan Business Cooperation Committee. In between I got a recognition by way of an Award from the Japanese Government by name, Good Citizen Award.

Life was very active. Parameshwar was born after our landing in Tokyo after four years. Both children grew up in Tokyo and studied in the International Schools throughout. We are so happy that both the children got married and all the arrangements were made by the members of this group, who are conducting Pongal. If asked the question where I belong to, I always used to say Athipotta in Palakkad Dist and Pushkala about her hometown in Kottayam Dist in Kerala but both the children were in love with their birthplace and very proud of Tokyo.

Shri A P S Mani, Founder and Coordinator of Indian Community Activities Tokyo, received the Pravasi Bharatiya Samman, an award to recognize the exceptional contribution made by Non-Resident Indians.

As the Convener of Indian Community in the years that I spent in Tokyo I was concentrating on the bigger all India based function like Diwali, but we were lucky to have a good team of youngsters who did their best to conduct regional function like Pongal, Makar Sankrant, Holi, Durga Pooja, Garbha during Navratri, Ganesh festival and other functions. Needless to say that Pongal is one of the early founded function in Tokyo scene. It is already 21 years old as a celebration well conducted in a large well decorated hall. A day of fun filled programme along with a sumptuous Pongal meal. Lot of hard work is put in by many volunteers to make this function a grand one year after year.

Recalling the days of my stay in Japan, I always felt that not a single day's stay was wasted. Full of active life though towards the end of my stay in 2010, I was already a Senior Citizen. Pushkala is always active and is full of energy and determination.

If one actively support the Community where they live, they will be recognised for their efforts. Though Pushkala & I were not aiming for any awards or appreciation, I was the recipient of Pravasi Bharatiya Samman Award from the President of India in Jan 2008. I was the first to get such an award from Japan as an NRI. Again, much of the credit for such an award goes to my close people in this Group and I remain ever grateful to them.

Yes, we are in Palakkad since end 2010 and settled well in the ancestral village in a home built by my grandfather some 120 years ago. Pushkala has got the home renovated so that it is livable for both of us. We are grateful to many who attend today's function of Pongal for their visit to our tiny village located in a corner of the World. We are longing for the visit of many in Tokyo who have not yet seen Kerala and our humble place.

பழமொழி

தமிழ் அறிவோம்

பாம்பின் கால் பாம்பறியும் என்பது தமிழ் முதுமொழி. பாம்புக்கு கால்கள் கிடையாது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. அப்ப்டியென்றால் இந்தப்பழமொழியின் பொருள் என்ன? இது என்ன சொல்குற்றமா இல்லை பொருட்குற்றமா?

வினாவிற்கான விடையை
ஒன்பதாம் பக்கத்தில் காண்க

இந்த காலத்து குழந்தைகள்

சொக்கன்

இந்த காலத்துல பிறக்கிற குழந்தைகள் எல்லாம் ஐ-போன், ஐ-பேட், டேப்லேட் போன்றவைகளை பற்றி அம்மாவின் கருவறைக்குள்ளேயே கரைத்துக் குடித்து விட்டு தான் வெளியே வருகிறார்கள் போல. எனக்கு தெரிந்த நண்பர் ஒருவரின் ஒன்றரை வயது குழந்தை, அவருடைய ஐ-போனை ஆன் பண்ணி, பிறகு அன்-லாக் பண்ணி, ஒரு விரலால் தட்டிக்கொண்டு இருக்கும். இன்னொரு நண்பரின் மூன்று வயது குழந்தை, ஐ-போனில் இருக்கும் விளையாட்டை தானாகவே திறந்து விளையாடும்.

இவர்களை எல்லாம் பார்க்கும்போது எனக்கு மிகவும் ஆச்சிரியமாக இருக்கும். எப்படி இவர்களுக்கு இந்த வயதிலேயே இவ்வளவு அறிவுத்திறன் இருக்கிறது என்று. இவர்களின் இந்த வளர்ச்சி ஒரு புறம் இருந்தாலும், இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பெற்றோர்களாகிய நாம் பதில் சொல்லி மாளாது. அதிலும் அவர்கள் கேட்கும் தர்மசங்கடமான கேள்விகளுக்கு பதில் அளிப்பது என்பது நம்முடைய திறமைக்கு சவால் விடும் காரியமாகும். இவர்கள் கேட்கும் இந்த 'அடல்ட்' கேள்விகளுக்கு எப்படி பதில் அளிப்பது என்பது பற்றி ஒரு வார இதழில் வெளி வந்த கட்டுரையை படிக்க நேர்ந்தது.அந்த கட்டுரையில், குழந்தைகள் மன நல மருத்துவர் அந்த மாதிரியான கேள்விகளை மிக அழகாக கையாளலாம் என்று கூறியிருக்கிறார். கண்டிப்பாக இது இளம் பெற்றோர்களுக்கு நன்மையாக இருக்கும்
அவருடைய பதில்களை படியுங்கள்.

''ஃபர்ஸ்ட் நைட்னா என்னம்மா?'' -குழந்தையின் இந்தக் கேள்விக்கு, 'கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் வர்ற முதல் நைட்தான், ஃபர்ஸ்ட் நைட்' என்ற சிம்பிளான ஒரு பதில் போதும். சில குழந்தைகள் விடாமல், 'அப்ப என்னம்மா செய்வாங்க?' என்று கேட்பார்கள். 'அங்கிளும் ஆன்டியும் அதுக்கு முன்ன நேர்ல பேசியிருக்க மாட்டாங்க. அன்னிக்குதான் நிறைய பேசுவாங்க, அவங்களோட லைஃப் பத்தி பிளான் பண்ணுவாங்க' என்று வயதுக்கு ஏற்றமாதிரி விளக்கம் சொல்லலாம்.

அதேபோல, 'காதல்னா என்ன..?'என்று கேட்டால், 'உனக்கு சாக்லேட், டாய்ஸ் பிடிக்கும்ல. அதேபோல ஒரு அங்கிளுக்கு ஒரு ஆன்டியை பிடிச்சா, அல்லது ஆன்டிக்கு அங்கிளை பிடிச்சா... அது காதல், அன்பு, பிரியம்!'னு சொல்லலாம். இந்தக் கேள்வியை 10 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் கேட்டா, 'ஒரு ஆணுக்கு ஒரு பெண் மீது 25 வயதுக்கு அப்புறம் வர்றதுதான் உண்மையான காதல்!'னு அடிக்கோடிட்டு சொல்லலாம்.

'குழந்தை எப்படிம்மா பொறக்குது?' - இது அடுத்த கேள்வி. 'கல்யாணம் ஆனவுடனே, அந்த அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கடவுள் குழந்தை கொடுப்பார். அந்தக் குழந்தை 10 மாசமா அம்மா வயித்துக்குள்ள கொஞ்சம் கொஞ்சமா வளரும். அப்புறம் அது பெருசாயிடும், இடம் பத்தாதுல... வயித்துல இருந்து வெளிய வந்துடும்!' என்று சொல்லுங்கள்.

'எய்ட்ஸ்னா என்னம்மா..?' என்று கேட்டால், 'ஹெச்.ஐ.வி-னு ஒரு கிருமியால ஏற்படற நோய். நாம சுத்த பத்தமா இல்லாம இருந்தா, எய்ட்ஸ் நோய் வரும்!' என்ற அடிப்படை விளக்கம் 10 வயதுவரை போதுமானது.
டி.வி-யில் பார்க்கும் பார் காட்சிகள், பக்கத்து வீட்டுக்காரர் அல்லது உறவுக்காரர் குடித்துவிட்டு சலம்புவதைப் பார்த்து குழந்தைகள் கேள்வி கேட்டால், 'அது கெட்ட தண்ணி. அதைக் குடிச்சா, கெட்ட சந்தோஷம்தான் கிடைக்கும். ஹெல்த் எல்லாம் கெட்டுப்போயிடும். அதனால அதை எப்பவுமே குடிக்கக் கூடாது!' என்று சொல்லிக் கொடுங்கள்'' என்றார்.

''பொதுவாக குழந்தைகள் தங்கள் பெற்றோர் மற்றும் டீச்சரிடம்தான் முதலில் தங்கள் கேள்விகளை கட்டவிழ்த்துவிடுவார்கள். அதற்கு அவர்களைத் திருப்திப்படுத்தும் விதமாக பதில் சொன்னால்தான், தங்களின் உலகத்தை தொடர்ந்து அவர்கள் உங்களிடம் பகிரப் பழகுவார்கள். ஒருவேளை தங்களுக்குப் பதில் கிடைக்காமல் போனாலோ, பதிலுக்குப் பதிலாக பெற்றோர் டென்ஷன் ஆனாலோ, பக்கத்து வீட்டு அங்கிள், ஆன்டி, டிரைவர் என்று பதில் தேட ஆரம்பிப்பார்கள்.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் மலிந்து கிடக்கும் இந்தக் காலத்தில், 'ஃபர்ஸ்ட் நைட்'னா என்ன அங்கிள்?' என்று ஏழு வயதுப் பெண் குழந்தை வெளியாளிடம் கேட்பதில் உள்ள விபரீதத்தைப் புரிந்துகொண்டு, குழந்தைகளின் கேள்விகள் எப்போதும் பெற்றோரை நோக்கியே மடை திறக்கும் சூழலை நீங்கள்தான் உருவாக்க வேண்டும்''

''சில குழந்தைகள் நண்பர்கள், பக்கத்து வீடு என்று வெளிப்பழக்கத்தில் சிலசமயம் கெட்ட வார்த்தை கற்று வந்து வீட்டில் பேசுவார்கள். அதைக் கேட்டவுடன் குழந்தையைத் திட்டுவதோ, அடிப்பதோ வேண்டாம். அது பண்பற்ற வார்த்தை என்பதையும், அவ்வாறான வார்த்தைகளைப் பேசுபவர்களை மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போய்விடும் என்றும் விளக்கமாகச் சொல்லுங்கள். மேலும் குழந்தை யாரிடமிருந்து அந்த வார்த்தையை கற்றுக்கொள்கிறதோ, அவர்களிடம் குழந்தை முன் அதுபோன்ற வார்த்தைகளைப் பேச வேண்டாம் என்று சொல்வதுடன், அவர்களின் பழக்கத்தையும் தவிருங்கள். சக குழந்தைதான் உங்கள் குழந்தைக்கு அந்த வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்கிறது என்றால், அதன் பெற்றோரிடம் முறையிடுங்கள். தங்கள் பிள்ளை பற்றி சொல்வதை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்றாலும், சொல்வது உங்கள் கடமை'' என்றார் அழுத்தமாக.

தொடர்ந்தவர், ''அதேபோல ஐந்து வயதுக்குள்ளேயே குழந்தைகளுக்கு குட் டச், பேட் டச் போன்றவற்றைக் கற்றுத் தர வேண்டும். 13 - 19 வயதிலான காலகட்டம், குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ரொம்பவே சிக்கலான காலகட்டம். இந்த வருடங்களில் குழந்தைகள், பெற்றோர்கள் எது சொன்னாலும் கேட்க மாட்டார்கள். அது வயதின் கோளாறு. அதைப் புரிந்துகொள்ளாமல் மேலும் மேலும் கோபப்பட்டு பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பிடிக்காமல் போகும்படி நடந்து கொள்ளக்கூடாது. அவர்களின் ஹார்மோன் கோபங்களைப் பொருட் படுத்தாமல், அன்பை மட்டுமே தொடர்ந்து தந்து கொண்டிருக்க வேண்டும்'' என்று அழகாக முடித்தார் அந்த மன நல மருத்துவர்.

உண்மையில் இந்த கட்டுரையைப் படிக்கும்போது, குழந்தைகளின் கேள்விகளுக்கு நாம் எவ்வளவு மதிப்பு கொடுக்க வேண்டும் என்று தெரிய வருகிறது. ஒரு நாளைக்கு ஒரு நேரமாவது, நாம் நம் குழந்தைகளோடு சேர்ந்து உணவு உண்ண வேண்டும். அது பெரும்பாலும் இரவு உணவாக தான் அமையும். அப்படி நாம் நம் குடும்பத்தாரோடு சேர்ந்து உணவு உண்ணும்போது, அன்றைக்கு நடந்த நிகழ்ச்சிகளை நாம் பகிர்ந்து கொண்டால், குழந்தைகளும், அவர்களுக்கு நடந்த நிகழ்ச்சிகளை நம்மிடம் மறைக்காமல் பகிர்ந்து கொள்வார்கள். இப்படி பகிர்ந்துக் கொள்ளுவதால் நாம் தான் அவர்களுக்கு உற்ற நண்பர்களாக அதாவது "Best Friend" ஆக இருப்போம். என் தாய் அடிக்கடி சொல்லுவார்கள், ஒரு குழந்தைக்கு உண்மையான ரோல்மாடல் அந்த குழந்தையின் பெற்றோர் தான் என்று. அதனால் தான், பெற்றோர்களாகிய நாம் சரியாக நடந்து கொண்டால், குழந்தைகளும் நல்ல குழந்தைகளாக வளர்வார்கள்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே

Wishing you all a Happy Pongal

With best Complients from

बैंक ऑफ़ इंडिया
Bank of India

Bank of India
Mitsubishi Naka Dori Building,
2-2-3 Marunouchi, Chiyoda-ku,
Tokyo 110-0005

சகுரா சொல்லும் தத்துவம்

கவிதை

ஆறுமுகம்

வசந்தத்தின் வரவை சொல்லும் வண்ண சகுராவே !
உன்வரவால் மனம் மகிழும் வண்ண சகுராவே!

சில நாட்களே வாழ்ந்தாலும் சின்ன சகுராவே!
உன் வாழ்வால் ஒரு அழகிய தத்துவம் தந்தாய்!

நீ அழகாய் மலர்ந்து உச்சியில் இருப்பாய் !
உன்னை எல்லோரும் போற்றி கொண்டாடி மகிழ்வர்!

நீ சருகாய் உதிர்ந்து கீழே கிடப்பாய்!
உன் இருப்பை மறந்து மிதித்து செல்வர்!

மனிதன் வாழ்வின் உச்சியில் இருக்கும் போது
உலகம் அவனை போற்றும்!

மனிதன் வாழ்வில் கீழே இருக்கும் போது
உலகம் அவனை மிதிக்கும் !
இதுதான் நீ உணர்த்தும்
வாழ்க்கை தத்துவமோ.

பழமொழி பாம்பின் கால் பாம்பறியும்

இந்தப்பழமொழிக்கு இரண்டு விளக்கங்கள் உள்ளன. முதல் விளக்கம் - பாம்புக்கு உண்மையில் கால்கள் உண்டு என்பது. சமீபத்திய அறிவியல் கண்டுப்பிடிப்புகள் பரிணாம வளர்ச்சியில் கால்கள் செயலிழந்து போக பயனற்ற உறுப்பாக தோல்களுக்கு உள்ளே மறைந்திருக்கிற கால்களை அடையாளம் காட்டுகின்றன. பழமொழி நானுறு எழுதிய காலகட்டத்தில் தமிழன் இதை அறிந்திருந்தான் என்றால் அது மலைப்புக்குரியது.

இரண்டாவது விளக்கம் மொழி சார்ந்தது. கால் என்பதற்கு இடம் என்று பொருள். நாற்று நடும் இடம் நாற்றங்கால். என்பது போல பாம்பு வசிக்கும் இடம் பாம்பின்கால். பாம்புவசிக்கும் இடம் மற்ற பாம்புகளும் அறியும் என்று பொருள்படும்.

சிற்றிதழ் இயக்கமும், நவீன இலக்கியமும்

செந்தில்குமார்

தமிழில் சிறு பத்திரிக்கையின் மூலம் நிகழ்த்தப்பட்ட இலக்கியச் சாதனைகள் வியப்புக்குரியவை. வெகுஜனப் பத்திரிக்கைகள் (விகடன், கல்கி, குமுதம் போன்றவை) பெரும்பாலும் அனைவருக்கும் புரியும்படியான எழுத்துக்களை மையப்படுத்தி வெளிவருபவை. எளிமையான கதைகள் மற்றும் படிக்க சுவாரஸ்யமான துணுக்குகள், நடிகர்களின் பேட்டி என்று தமக்கென்று ஒரு வளையத்தை ஏற்படுத்திக் கொண்டவை. பத்திரிக்கை விற்பனையை நோக்கமாக கொண்டவை. இப்படி எளிமையே தாரகமந்திரமாக கொண்டு செயல்படுவதன் மூலம் நாளடைவில் தீவிரமான சிந்தனையை, வாழ்க்கை குறித்த கேள்விகளை உள்ளடக்கிய, வாசகனிடம் உழைப்பைக் கோரும் எழுத்துக்களை இந்த பத்திரிக்கைகள் நிராகரித்தன.

இதன் மூலம் உலகின் மற்ற மொழிகளில் நிகழ்ந்த நவீன இலக்கிய பாய்ச்சல்கள் தமிழில் நிகழாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. மேலும், இரு நூற்றாண்டுகளாக ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் சிக்கி, ஜனநாயக உரிமைக்காக போராடிக் கொண்டிருந்த காரணத்தால், மிகநுட்பமாக எழுதப்பட்ட சங்க இலக்கியங்களை கொண்ட, கம்பனின் வளமான தமிழ்மொழியில், நவீன இலக்கியம் விழித்தெழ, சற்று தாமதிக்க நேர்ந்தது.

தமிழில் நவீன இலக்கியத்தின் ஆரம்பப்புள்ளி சுப்பிரமணிய பாரதிதான். இனியொரு விதி செய்வோம் என்று சாதாரண மக்களை நோக்கி அறைகூவல் விட்ட்து அவன்தான். தழல் வீரத்திலே மூப்பென்றும் குஞ்சென்றும் உண்டோ என்று புதுக்கவிதை மரபை துவக்கி வைத்தவன் பாரதியே. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைசெல்வங்கள் அனைத்தும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்கிற பாரதி, "யாதும் ஊரே, யாவரும் கேளிர் " என்று இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே உலகம் முழுவதையும் தனது சொந்தமாக கருதிய கனியன் பூங்குன்றனாரின் நீட்சிதான்.

பாரதிக்கு பிறகேனும், சரியான திசையில் சென்று வெகுஜனமக்களை சென்றடைந்திருக்க வேண்டிய தீவிர இலக்கியத்தை, மடை மாற்றி விட்டது கல்கி, அகிலன், சாண்டில்யன் போன்றோரின் மிகை கற்பனை (ஃபேண்டஸி) நாவல்கள். பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், கடல் புறா என்று சற்றும் யதார்த்ததிற்க்கோ தர்க்கத்திற்க்கோ ஒவ்வாத கதைகளை தொடர்ந்து படித்த தமிழர்கள், தூக்கத்திலும் குதிரை ஓட்டி, வாள் உருவி சபதமிட்டார்கள். இளவரசியை கவர்ந்து செல்ல இருபத்து நாலுமணி நேரமும் திட்டமிட்டார்கள்.

சரி, வெகுஜனப் பத்திரிக்கைகளின் வரலாற்று புனைவுகள் இப்படி தமிழர்களை மிதமிஞ்சிய கற்பனைகளில் அலைக்கழிக்கிறதே, சமூக கதைகளின் லட்சணம் எப்படி என்று பார்த்தால், அவை முக்கோணக் காதல் கதைகளில் மூச்சு முட்டிக் கிடந்தது. வெகுஜனப் பத்திரிகைகளில் வெளிவரும் கதைகள் நேரடியானவை. படிக்கும் சுவாரஸ்யத்தை மட்டுமே முன்னிறுத்துபவை. வாழ்க்கையை எளிமைபடுத்தி கருப்பு, வெள்ளையில் காட்சிப்படுத்துபவை. எந்த கேள்விகளையும் எழுப்பாதவை. இந்த கதைகளில் வரும் பாத்திரங்கள் எளிமையான, எந்த கேள்விகளும் இல்லாத மனிதர்கள். யதார்த்த உலகிற்கும், இது மாதிரியான கதைகளுக்கும் எந்த தொடர்புமிருப்பதில்லை. அந்த காலக்கட்டத்தில் விகடனில் தொடர்ந்து வெளிவந்த ஜெயகாந்தனின் முத்திரை கதைகள் மட்டுமே யதார்த்த இலக்கியத்திற்கான ஒரே ஆறுதல்.

இந்த சூழ்நிலையில் உண்மையான வாழ்க்கையை, கேள்விகளை, முழுமை நோக்கை, தத்துவத்தை, மாற்றுச் சிந்தனையை எழுத முற்ப்பட்ட நவீன இலக்கியவாதிகளுக்கு, சிறு பத்திரிக்கைகள் மட்டுமே தளம் அமைத்து கொடுத்தன. இந்த சிறு பத்திரிக்கைகள் யாவும், தீவிர இலக்கியத்தையே உயிர் மூச்சாய் நம்பும் லட்சியவாதிகளால், மனைவியின் தாலியை அடமானம் வைத்தும், நிலத்தை விற்றும் முன்னெடுக்கப்பட்டன. இப்படி தொடங்கப்பட்ட இந்த சிறு பத்திரிக்கைகளுக்கு என்று ஒரு வடிவம் இருந்தது. மாதந்திர பத்திரிக்கை என்று சொல்லப்பட்டாலும், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் வரும் என்று அறுதியிட்டு சொல்ல முடியாது. எப்போது வேண்டுமானாலும் பொருளாதார சிக்கலால் நிறுத்தப்படலாம். அதிகபட்சம் இருநூறு படிகளுக்கு மேல் அச்சிடப்படமாட்டாது. கடைகளில் விற்பனைக்கு வராது. சந்தா மூலமாகவே அனுப்பப்படும். தமிழகத்தின் ஏதோ ஒரு மூலையில் இருந்து அச்சிடப்பட்டு மற்றொரு மூலையில் வசிக்கும் ஒத்த சிந்தனையாளரை நோக்கி பயணிக்கும். ஒருபோதும் இதழ் விற்பனையை கருத்தில் கொள்ளாது. இவைதான் தமிழ் சிற்றிதழ்களின் அடையாளங்கள்.

இந்த பத்திரிக்கையை நடத்துபவர்கள், லௌகீக வாழ்க்கைக்காக பொரி விற்றுக் கொண்டிருப்பார்கள். அல்லது தையல் வேலை செய்து கொண்டிருப்பார்கள். வீட்டின் குடிசையை மாற்ற இயலாமல் மழை காலத்தில் மனைவி, குழந்தைகளுடன் போராடிக் கொண்டிருப்பார்கள். புகழ் வெளிச்சமோ, பணமோ, வாழும் போதே சிறிய அங்கீகாரமோ ஒருபோதும் தங்களுக்கு கிடைக்காது என்பதை தெளிவாக உணர்ந்திருப்பார்கள். ஆனால் இவர்கள்தான் நவீன தமிழ் இலக்கியத்தின் அச்சாணிகள்.

இந்த இதழ்களில்தான், தமிழின் மிகச்சிறந்த இலக்கியவாதிகளான புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபலன், மௌனி, கரிச்சான் குஞ்சு, க.நா.சுப்பிரமணியம், சி.சு.செல்லப்பா, கு.அழகிரிசாமி, அசோகமித்திரன், சுந்தர ராமசாமி, தி.ஜானகிராமன் போன்றவர்கள் எழுதினார்கள்.

இந்த சிறு பத்திரிக்கைகள் மூலமே, உலகின் எந்த மொழிக்கும் நிகரான படைப்புகள் தமிழில் உருவாகின. லட்சகணக்கில் அச்சிடப்பட்டு, தமிழர்களின் இல்லங்கள் தோறும் அலங்கரித்த வெகுஜனபத்திரிக்கைகள், நடிகர்களின் சம்பள பட்டியலை வெளியிட்டும், நடிகைகளை கொண்டு சிரசாசனம் செய்வது எப்படி? என்று செய்முறை விளக்கம் கொடுத்தும், கலைச்சேவை செய்துக் கொண்டிருந்த நேரத்தில்தான், இந்த சிறு பத்திரிக்கைகளில் உலகின் முக்கிய இலக்கியவாதிகளான போர்ஹே குறித்தும், ழான் பால் சர்த்தார் குறித்தும் ஆழமான விவாதங்கள் நடந்துக் கொண்டிருந்தது. உலகின் அற்புதமான படைப்புகள் இந்த பத்திரிக்கைகளில் தொடர்ச்சியாக மொழிப் பெயர்க்கப்பட்டு எண்பதுகளில் வெளிவந்தது. மாற்றுச் சிந்தனையை தொடர்ந்து எல்லா துறைகளிலும் முன் வைத்தது. விளிம்பு நிலை மனிதர்கள் குறித்து எழுத்த் தலைப்பட்டது.
எத்தனையோ நாட்களை தியாகம் செய்து, நல் உழைப்பை நல்கி எழுதப்பட்ட படைப்புகள் வெறும் இருநூறு பேருடன் முடிந்து போனது எவ்வளவு பெரிய வரலாற்று சோகம்?

உலகின் தலைச் சிறந்த நாவல்களில் ஒன்றான புயலில் ஒரு தோணி நாவலை எழுதிய ப.சிங்காரம், எந்த அங்கீகாரமும் இல்லாது மதுரை நாடார் மேன்ஷனில் 97 ஆம் ஆண்டு தனிமையில் உயிர் நீத்தார். தனது சொத்தை விற்று 1959இல் "எழுத்து" சிற்றிதழை நடத்திய சி.சு.செல்லப்பா தனது இறுதிக் காலத்தில், இரு துணி பையில் தனது இதழ்களை எடுத்துக் கொண்டு கால்நடையாகவே பல கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பல கல்லூரிகளிலும் நவீன இலக்கியத்தை அறிமுகம் செய்ய முனைந்தார். திருவல்லிக்கேணி ஒண்டுக் குடித்தனத்தில் வாழ்ந்து கொண்டுதான் 1650 பக்கங்களை கொண்ட சுதந்திர தாகம் என்ற நாவலை எழுதினார்.

1930களில் தொடங்கப்பட்ட மணிக்கொடி சிற்றிதழ் மூலம் புதுமைபித்தன், ந,பிச்சமூர்த்தி, மௌனி, லா.ச.ரா போன்றவர்கள் அறிமுகம் செய்யப்பட்டு மணிக்கொடி எழுத்தாளர்கள் என்ற மரபே உருவாகியது. பொய்த்தேவு என்ற மகத்தான படைப்பை எழுதிய க.நா.சுப்பிரமணியம், உலகின் மற்ற மொழிகளில் இருந்து ஐம்பதுக்கும் மேற்ப்பட்ட படைப்புகளை தனி மனிதனாக தமிழில் மொழிபெயர்த்தார்.

ந.கிருஷ்ணமூர்த்தியை ஆசிரியராக கொண்டு வெளிவந்த "கசடதபற " இதழில் வெங்கட சாமிநாதன், பிரமிள், ஞானகூத்தன், ந.முத்துசாமி போன்றவர்கள் தொடர்ந்து இயங்கினார்கள். இதே காலக்கட்டத்தில் வெளிவந்த பிரக்ஞை, தீபம், ஞானரதம்,கணையாழி போன்றவை தொடர்ந்து தரமான எழுத்தை முன்வைத்து இயங்கின. 1971இல் வெளிவந்த வானம்பாடி சிற்றிதழ் கவிதைகளை முன்னிறுத்தி வெளிவந்தது. இந்த இதழில் புவியரசு, மு.மேத்தா, இன்குலாப், அப்துல் ரகுமான், கல்யாண்ஜி, ஞானி, வண்ணநிலவன்,விக்ரமாதித்யன் போன்றோர் கவிதை எழுதினார்கள். 1976இல் கொல்லிப்பாவை இதழ் வெளிவந்தது. 1975இல் ராஜமார்த்தாண்டனின் முயற்சியில் வெளிவந்த கோகயம் என்ற இதழுக்கு,

விலையே கிடையாது. இதழ் வேண்டும் என்று நினைப்பவர்கள் தபால் தலை மட்டும் அனுப்பி இதழை பெற்றுக் கொள்ளலாம்.

சுந்தர ராமசாமி நடத்திய "காலச்சுவடு" இதழில், ஜெயமோகன், வேதசகாயகுமார், மனுஸ்யபுத்திரன், யுவன் சந்திரசேகர், அ.முத்துலிங்கம், எஸ்.ராமகிருஷ்ணன், பிரேம்-ரமேஸ் போன்ற தமிழின் தற்கால முக்கிய படைப்பாளிகள் இயங்கினார்கள். தற்போது மனுஸ்யபுத்திரன் நடத்தும் உயிர்மை இதழ் குறிப்பிடதக்க ஆளுமைகளை தமிழில் அறிமுகம் செய்திருக்கிறது.

பொதுவாக சிற்றிதழ்களில் எழுதிய ஆளுமைகள் வெகுஜனபத்திரிக்கைகளில் எழுதுவதை வெறுத்தார்கள். முழுவதும் வணிகத்தையே மையமாக்கி சுழலும் வெகுஜனபத்திரிக்கைகள் தமது சுதந்திரத்தை பாதிக்கும் என்று கருதினார்கள். ஆனால் அந்த நாளிலேயே இரண்டு குதிரையிலும் சவாரி செய்ய முயற்சித்தார் சுஜாதா. கணையாழியின் கடைசி பக்கங்களில் எழுதிக் கொண்டே, குமுதத்தில் தொடர்கதை எழுதினார். வெகுஜன எழுத்தாளராக பெரும் வெற்றிபெற்றார் சுஜாதா. ஒரு முறை சுஜாதா எழுதிய சலவை கணக்கை வெளியிட்டு குமுதம் அழியாப் புகழைத் தேடிக் கொண்டது. ஆனால் சிற்றிதழ் உலகில் சிறந்த இலக்கியவாதியாக சுஜாதா நிறுவப்படவில்லை. எப்படியிருப்பினும் ஸ்ரீரங்கத்து தேவதைகள் போன்ற இலக்கியதரம் வாய்ந்த சிறுகதைகளை விகடனில் அவர் எழுதியது சாதனையே.

இப்படி தமிழின் நவீன இலக்கியம் முற்றிலுமே சிறு பத்திரிக்கை இயக்கத்தைச் சார்ந்துதான் உருவாகியது, இயங்கியது. கைக்காசை இழந்து, சுகதுக்கங்களை பொருட்படுத்தாது, இலக்கியத்தை முன்னிறுத்திய அந்த மகத்தான மனிதர்களுக்கு புலம் பெயர்ந்த தமிழர்களாகிய நாம் எந்த விதத்தில் நமது நன்றியை தெரிவிக்க முடியும்? கனடா நாட்டு புலம்பெயர்ந்த தமிழ்ர்கள் இலக்கிய தோட்டம் என்ற அமைப்பை நிறுவி வருடந்தோறும் தமிழ் எழுத்தாளர்களுக்கு இயல் விருது வழங்கி சிறப்பிக்கிறார்கள். இந்த விருது 2500 கனடிய டாலர் மதிப்பும், கேடயமும் கொண்டது. கடந்த வருடம் (2012) நாஞ்சில் நாடன் அவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. அப்படி ஒரு அமைப்பை ஜப்பானில் நிறுவி வருடந்தோறும் நாம் நடத்தும் பொங்கல் விழாவில் விருது வழங்கி நமது வரலாற்று கடனை தீர்த்துக் கொள்ளலாம்.

பின்குறிப்பு : பின்வரும் இணையப்பக்கத்தில் தமிழின் தலை சிறந்த சிறுகதைகளை படிக்கலாம்.

அழியாச்சுடர்கள் http://www.azhiyasudargal.blogspot.com

யாளி - ஒரு புரியாத புதிர்

தென்னிந்திய கோவில் சிற்பங்களில் மட்டும் காணக் கிடைக்கும் ஒரு விசித்திரமான மிருகம். கோயில் கோபுரங்கள், மண்டபத் தூண்களில் மட்டுமே காணப்படும் ஒரு கற்பனைச் சிலை என்பது தான் பலரது எண்ணம். சிங்க முகமும் அதனுடன் யானையின் துதிக்கையும் சேர்ந்தாற் போல் காட்சி தருவதைப் போன்று பல கோவில்களில் இவற்றின் சிலைகள் அமைக்கபெற்றுள்ளன. சிங்கத்தின் தலை கொண்டதை " சிம்ம யாளி " என்றும், ஆட்டுத்தலை கொண்டதை " மகர யாளி " என்றும், யானை முகத்தை "யானை யாளி " என்றும் அழைக்கிறார்கள்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இதே பூமியில் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ராட்சச உடல் அமைப்புடன் "டைனோசர்" என்ற மிருகங்கள் வாழ்ந்தது என்று கூறிய போது முதலில் நம்ப மறுத்த உலகம், பின்னர் அது குறித்த ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடத்தி அவற்றின் எலும்புகள், முட்டைகள், உருவ அமைப்பு போன்றவற்றை ஆதாரத்துடன் வெளியிட்ட பின்பு தான் நம்பத் தொடங்கினார்கள். பின்னர், இது குறித்த திரைப்படங்களை இயக்கியதும் இந்த மிருகங்கள் குறித்த தகவல் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை சென்றடைந்தது. அப்படியானால் பல ஆயிரம் ஆண்டுகள் வரலாற்று பின்னணி கொண்ட இந்திய துணைக்கண்டத்தின் தென்பகுதியில் இப்படி ஒரு பிரமாண்ட விலங்கின் பதிவுகள் ஏராளமாக பரவிக்கிடப்பதை பார்க்க முடிகிறது. சில கோவில்களில் இந்த மிருகத்தை குதிரையை போன்று கடிவாளமிட்டு அடக்கி அதன் மீது வீரர்கள் கையில் வாளுடன் அமர்ந்திருக்கிறார்கள். அப்படியானால் இவை போருக்கு பயன்படுத்தப்பட்டிருக்குமா?

தமிழ் அறிவோம்

இவற்றை எல்லாம் விட்டு ஒரு படி மேலே சென்று பார்த்தோமேயானால், இந்த யாளிகளுக்கென்று தமிழர்கள் தனியாகவே ஒரு வரிசையை கோவில் கோபுரத்தில் ஒதுக்கி இருக்கிறார்கள். அதை "யாளி வரிசை " என்றே அழைக்கிறோம். ராஜ ராஜன் கட்டிய பிரம்மாண்டமான தஞ்சை கோயிலில் கூட இந்த யாளிக்கென்று ஒரு முழு தனி வரிசையே ஒதுக்கப்பட்டுள்ளது. உருட்டும் கண்களோடும், கோரப்பற்களோடும் ஒரு விலங்கின் முகத்தை கோபுரத்தின் நான்கு திசையிலும் எளிதில் பார்க்க முடிகிறது. மேலும் தஞ்சை பெரியகோவில், மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் போன்ற தமிழ் மன்னர்களால் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான பழமையான கோவில்களில் எல்லாம் இரண்டு கால்களில் நிற்கும் முழு உயர முப்பரிமாண யாளியின் சிலையும், அந்த யாளி சிலையின் முழங்காலுக்கு கீழே யானை நிற்கும் சிலையையும் வடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட யாளி சிலை தென் இந்தியாவில் உள்ள நூற்றுக்கணக்கான கோவில்களில் ஆயிரத்துக்கு மேல் சிலைகள் உள்ளன. உலகில் எந்த விலங்குகளுக்கும் இந்த எண்ணிக்கையில் முழு உருவ, முப்பரிமாண சிலைகள் கிடையாது என்பது உலகம் அறிய தவறிய உண்மை. குறிப்பாக தமிழர்கள் அறிய தவறிய உண்மை. நம்மில் பலர் கோவில்களுக்கு சென்றிருந்தாலும், இந்த யாளி சிலைகளை முழு மனதோடு இதுவரை கவனித்து இருக்க மாட்டோம். அது தான் யாளி என்ற அதிசய விலங்குக்கு இதுவரை நடக்கும் அவலநிலை.

யாளிக்கு எத்தனை கோவில்களில், எத்தனை விதமான சிலைகள் உள்ளன? யாளியில் எத்தனை வகைகள் உள்ளன? பண்டைய காலத்தில் வாழ்ந்த சிற்பக்கலை நிபுணர்கள் காணாத ஒரு உருவத்தை சிலையாக வடித்திருப்பார்களா? யாளி உருவம் எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது? நமது சிறிய கோவில்களிலும் யாளியின் உருவம் உள்ளதை நாம் அறிவோமா? யாளியைப் பற்றி புராணங்கள் என்ன சொல்கின்றன? யாளி என்ற உயிரினம் கற்பனையா? இல்லை அறிவியல் பூர்வமாக அது ஒரு உயிரினமா? யாளி லெமூரிய நாகரீகத்தின் உண்மையான மிருகமா? வாழாத ஒரு உயிரினத்தை ஆயிரக்கணக்கில் சிற்பங்களாக வடிக்க காரணம் என்ன? குடிக்கு அடிமையாகிக் கிடக்கும் தமிழ் சமூகத்தில் இவற்றை குறித்து யார் ஆராய்ச்சி செய்யப்போகிறார்? பதவிக்கு அடித்துக்கொள்ளும் தமிழக அரசியலில் இவற்றின் ஆராய்ச்சிகளுக்கு நிதி ஒதுக்கப்படுமா அல்லது கடைசி வரை அவிழ்க்க முடியாத மர்ம முடிச்சாகவே இவை மண்ணோடு மண்ணாகிவிடுமா?

எதற்குமே பதில் இல்லை !!!!

உதடுகள் மட்டும் உச்சரிக்கட்டும்

லால்குடி நடராஜன்

அமைதியாக போய்க்கொண்டிருந்த 2012ஆம் ஆண்டை உலுக்கிப்போட்டது அதன் கடைசி நாட்கள். காரணம் பாலியல் பலாத்காரத்தின் தலைநகரில் நடந்த சம்பவம். ஆம். இந்தியாவின் தலைநகரம், பாலியல் பலாத்காரத்தின் தலைநகராக மாறி ரொம்ப காலமாகி விட்டது..

நள்ளிரவில் ஒரு பெண் தனியாக, நகைகளுடன் வெளியே சென்று பத்திரமாக திரும்பும் நாள்தான் இந்தியாவிற்கு சுதந்திரம் வந்ததாக அர்த்தம் என்று மகாத்மா காந்தி சொல்லிவிட்டுப்போனார். அவர் சொன்ன சுதந்திரம் வந்ததா? அதை சோதித்துப் பார்ப்பதற்குக்கூட ஒரு பெண்ணை வெளியே அனுப்ப முடியாத நிலையில் நமது தலைநகரம் இருக்கிறது.

இத்தகைய பாலியல் குற்றங்களை தடுப்பதற்கு ஒரே தீர்வு, குற்றத்திற்கான தண்டனையை கடுமையாக்குவதும், அதற்கான சட்டத் திருத்தத்தை உடனடியாக கொண்டுவருவதும்தான் என்கிறது ஒரு தரப்பு.

தண்டனையை கடுமையாக்குவது குற்றத்தின் எண்ணிக்கையை குறைக்குமா? நிச்சயமாக இல்லை என்று சொல்கிறது புள்ளிவிவரங்கள். கடுமையான சட்டங்கள் கடைபிடிக்கப்பட்டுவரும் அரபு நாடுகளில் குற்றங்கள் தொடர்ந்து நடைபெறுவதையும் பார்க்க முடிகிறது. இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் தண்டிப்பது என்பது உடனடியாக நிறைவேறக்கூடியநடக்கும் காரியமல்ல. புத்தகத்தில் உள்ள சட்டம் எல்லோருக்கும் சமமாக இருப்பதில்லை. வசதிபடைத்தவர், அரசியல்வாதி, ஓட்டையாண்டி என்று ஆளுக்கு ஏற்ப நடைமுறையில் சட்டம் மாறுகிறது. இதனால் கடுமையான சட்டம் குற்றத்தை குறைக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது. அது சட்டபுத்தகத்தின் வரிகளை மட்டுமே அதிகப்படுத்தும்.

இயற்கையிலேயே ஆண்கள் உடல் ரீதியாக வலிமையானவர்கள். பலாத்காரம் ஆண்மையின் அடையாளம் என்று நினைப்பதால் கூட இத்தகைய தவறுகள் நடைபெறுகிறது என்று சொல்பவர்களும் உண்டு. அதாவது இத்தகைய குற்றங்கள் ஆண்மையோடு தொடர்புடையது என்று நினைக்கிறார்கள். இதை படிக்கும் போது கம்பராமாயணப் பாடல் ஒன்று நம் நினைவிற்கு கொண்டுவருகிறது.

சஞ்சலம் கலந்த போது தையலாரை உய்ய வந்து
அஞ்சல் அஞ்சல் என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையோ?

பாலகாண்டத்தில், கன்னிமாடத்துக் காதல் என்ற அத்தியாயத்தில் இடம் பெற்ற பாடல். பெண்களுக்கு எப்போதெல்லாம் மனத்தில் சஞ்சலம் தோன்றுகிறதோ, அந்தந்த சமயங்களில் அவர்களிடம் சென்று “அஞ்சாதே! அஞ்சாதே என்று தேற்றுவதே ஆண்மகனின் பணி. இதுதான் ஆண்மை. இதைச் செய்யாத ஆண்மை என்ன ஆண்மை? என்று கேள்வி எழுப்புகிறது. அதாவது பெண்களை தேற்றுவதுதான் சிறந்த ஆண்மையாக கருதப்படுகிறது. அதனால் பலாத்காரம் மட்டுமே ஆண்மையை வெளிப்படுத்துகிறது என்பது முட்டாள்தனம்.

குற்றத்தில் ஈடுபடுபவர்கள் மீது மட்டும் எல்லா பழியையும் சுமத்திவிட்டு நாம் ஒரு ஓரமாக உட்கார முடியாது. அவர்கள் குற்றம் செய்வதற்கான வழிவகைகளை வகுத்துக்கொடுத்த ஒவ்வொருவருக்கும் குற்றத்தில் பங்கு உண்டு. குற்றவாளிகளை உசுப்பேற்றும் சில விஷயங்களைத் தவிர்த்தாலே போதும் பாதி குற்றங்கள் குறைந்துவிடும். பெண்களை போகப்பொருட்களாகச்சித்தரிக்கும் பத்திரிக்கை, டிவி, சினிமாவை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

குற்றவாளிகளுக்கு அளிக்கப்படவேண்டிய தண்டனையைப் பற்றி பேசுபவர்கள், குற்றங்களை செய்யத்தூண்டுபவர்களையும் தண்டிக்கும் சட்டங்களை வகுக்கவேண்டும் என்று வலியுறுத்தலாம்.

சரி. இவைகளையெல்லாம் ஒரு ஓரமாக வைப்போம். பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட டெல்லி மாணவியைப்பற்றி பார்ப்போம்.

அவர் மரணப்படுக்கையில் போராடிக்கொண்டிருக்கும்போது அவ்வப்போது அவருடைய அம்மாவிடமும், சகோதரனுடனும் பேசினாராம். பேசமுடியாத நேரங்களில் கூட தன் எண்ணங்களை சைகைமூலம் வெளிப்படுத்தினாராம். இரண்டு விஷயங்களை அடிக்கடி சொல்லிவந்தாராம். அவர் சொன்ன இரண்டு விஷயங்கள்

ஒன்று, “அம்மா ..... நான் வாழணும்” .

இரண்டு, “குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்” .

“அம்மா... நான் வாழணும்” என்று சொல்லும்போது மனத்தின் ஆழத்தில் எத்தனை ஆசைகளை தேக்கிவைத்திருக்கிறார் என்பது புரிகிறது. உலக ஆசாபாசாங்களை உதறித்தள்ளும் வயதல்ல அவருக்கு. உதிக்கப்போகும் புத்தாண்டை எப்படி கொண்டாடலாம்? பிப்ரவரி மாதம் நடைபெறப்போகும் திருமணத்தை எப்படி நடத்தலாம்? எப்படி வாழலாம் என்ற கனவுகளோடு காந்திருந்தவரை துருபிடித்த கம்பிகள் சிதைத்துவிட்டன.

எது எப்படியோ, அவர் இன்று நம்மிடையே இல்லை. நாம் அவருடைய முதல் ஆசையை நிறைவேற்றத் தவறிவிட்டோம். ஆம். அவர் நம்முடன் வாழப்போவதில்லை. ஆனால், என்றென்றும் நம்முடைய எண்ணங்களில் வாழப்போகிறார். பாலியல்பலாத்காரம் என்ற வார்த்தையை படித்தாலோ, காதில் கேட்டாலோ, பளிச்சென்று நம் மனத்தில் உதிக்கப்போகிறார். இன்று நாம் அவருக்குச் செய்ய வேண்டியது இரண்டு விஷயங்கள்.

∴ அவர் ஆசைப்பட்டபடி, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படவேண்டும். அதுவும் குறுகிய காலகட்டத்தில்.

∴ பாலியல் தொடர்பான குற்றங்கள் தோன்றாத அளவிற்கு சமூகத்தில் மாற்றங்களை கொண்டுவரவேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

புதுவருடம் பிறந்தவுடன் “ஹேப்பி நியூ இயர்” என்று இவ்வளவு காலம் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியோடு வாழ்த்துக்களை சொல்லிவந்தோம். ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல. 2013ஆம் ஆண்டை ஓடி வந்து உற்சாகமாய் வரவேற்க காத்திருக்கும் பலரின் மனத்தில் அவரின் மரணம் ஒரு அழுத்தத்தை ஏற்படுத்திவிட்டது. அதனால் பாலியல் பலாத்காரம் என்பதே 2013ல் நடக்கவில்லை என்ற நிலையை ஏற்படுத்துவோம். பிறகு மனநிறைவோடு மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்வோம். இதுதான் அந்த மாணவிக்கு நாம் செலுத்தும் அஞ்சலி. அதுவரை நமது உதடுகள் மட்டும் “ஹேப்பி நியூ இயர்” என்ற வார்த்தையை உச்சரிக்கட்டும்.

TENSION

M SUBRAMANIAM

Now a days, tension is very common now for all and to kill the tension of a person my fellow banker has collected some quotable Quotes and which is very interesting.

. 3 nice thoughts of an intelligent mind

1. Kill the tension before it kills you
2. Reach your goal before the goal kicks you
3. Live life before it leaves you.

Really, it is a very good saying affecting our mind and providing supplements to our thought.

If so, how do you kill your tension and side by side get success in life?
Here is a quote,;

seven secrets of success,

which is available in your room itself.

1. Roof says	Aim High'
2. Fan	Be cool
3. Clock	Every minute precious
4. Mirror	Reflect before you act
5. Window	See the world
6. Calendar	Be update
7. Door	Push hard to achieve your goal

Some sayings convert impossibility to possibility, bitterness to sweetness and nothing to something. These are like words noted below:

- ✓ “Life is like a flute .It can have holes and at times emptiness but if we work on it, the same flute can produce magical melodies"
- ✓ “If you fail somewhere and if God does not listen to your prayer don't be disheartened. Feel the beauty of belief of God:
- ✓ “If He does not give you when you ask, surely He will give you when you need"
- ✓ It is only peace and harmony which really matters in life. Both can be achieved only if you lead a simple life. Though difficult to be still, you can. You can achieve the difficult thing:
- ✓ "Living is very simple. Loving is very simple. Laughing is also simple. Winning is also simple. But being simple is very difficult"

So try the difficult task and be simple.

Courtesy: Collected my fellow Banker and given in our quarterly JOURNAL

அழுத புள்ள சிரிச்சுதாம். கழுதைப்பாலை குடிச்சுதாம்

சாது ஸ்ரீராம்

காலை மணி ஏழு. வாசலில் காய்கறிக்காரரின் குரல். என்ன காய்கறி என்று பார்ப்பதற்கு வாசலுக்கு வந்தேன். கூட்டமாய் பலர் நின்று கொண்டிருந்தார்கள். அதில் பெரும்பாலோர் சிறுவர்கள். அவர்களைச் சுற்றி பலத்த சிரிப்பொலி. அப்படி என்ன காலையிலேயே காமெடி?

கூட்டத்துக்கு நடுவே ஒரு கழுதை. குட்டியுடன் நின்று கொண்டிருந்தது. பக்கத்தில் ஒருவர். கையில் ஒரு பை. அதில் ஒரு சொம்பு. தோளில் ஒரு கயிறு. அவர்தான் கழுதைக்குச் சொந்தக்காரர். அதாவது கழுதைக்காரர்.

‘டெங்கு காய்ச்சலுக்கு அருமையான மருந்து கழுதைப்பால். வாங்கி குடிங்க', என்று உரக்க கத்திக்கொண்டிருந்தார்.

இது நாள்வரை யாருமே கழுதைப் பாலை வீட்டு வாசல்வரை வந்து விற்றதில்லை. அனைவருக்கும் ஆச்சர்யம். கூடவே நக்கல் கலந்த சிரிப்பு. எதைப்பற்றியும் கவலைப்படாமல் சீரியஸான முகத்துடன் கூவிக்கொண்டிருந்தார் கழுதைக்காரர்.

‘பால் என்னய்யா விலை?' கேட்டார் ஒரு நண்பர்.

‘ஐம்பது மில்லியின் விலை நூற்றி ஐம்பது ரூபாய்'.

சுற்றி நின்றவர்கள் மலைத்துப் போனார்கள். ஆனால் அவர்களது நமட்டுச்சிரிப்பு மட்டும் குறையவேயில்லை.

‘இவ்வளவு காஸ்டிலியான பாலை' யா உன் கழுதைக்குட்டி இத்தனை காலம் குடிச்சிருக்கு', நையாண்டி கலந்த வார்த்தைகளில் கேட்டார் ஒருவர்.

கழுதைக்காரர் எதையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அமைதியாக நின்றுகொண்டிருந்தார். காரியத்தில் கண்ணாயிருக்கிறார் என்பது மட்டும் புரிந்தது.

‘ஏம்பா கழுதைப்பால் டெங்கு காய்ச்சலுக்கு நல்லதுன்னு யார் சொன்னது? என்றார் நண்பர்.

‘ஆதாரம் இருக்கு சார்', என்றவாறு தன் கொண்டுவந்திருந்த நாளிதழை பிரித்துக் காண்பித்தார்.

‘டெங்கு காய்ச்சலுக்கு மட்டுமல்ல, சளி, வயிற்றுப்போக்கு, வாந்தி போன்ற எல்லா வியாதிகளுக்கும் சிறந்த மருந்துங்க', என்றார் கழுதைக்காரர்.

பேச்சுவாக்கில் கழுதையை மறந்து போனார் கழுதைக்காரர்.

‘உன்னோட பஞ்சாயத்தையெல்லாம் அப்புறம் வைச்சுக்கய்யா. அங்க பாரு உன்னோட கழுதை ஓடுது', என்றார் மற்றொருவர்.

கழுதையை துரத்திக்கொண்டு ஓடத் துவங்கினார் கழுதைக்காரர். அவர் ஓடட்டும். நாமும் அவரை துரத்திக்கொண்டு போகவேண்டாம். ஆனால், அவர் சொன்ன விஷயத்தில் ஏதாவது உண்மையிருக்குமா என்பதை தேடிப்பார்ப்போம். அதற்கு முன் அங்கிருந்த சிறுவர்களை கூப்பிட்டேன்.

'ஏம்பா சிரிச்சீங்க?'

'யாராவது கழுதைப்பாலை காசு குடுத்து வாங்குவாங்களா?', என்றான் ஒரு சிறுவன்.

'அதைப் பார்த்தாலே வாந்தி வருது', என்றான் மற்றொரு சிறுவன்.

'நீங்க சொல்லறதெல்லாம் சரிதான். ஆனா, கழுதைப்பாலோட அருமை தெரியுமா? பதிலேதும் பேசாமல் பேசுவதை கவனிக்கத் தொடங்கினார்கள். வீட்டில் இருந்த பிஸ்கட்டை அவர்களுக்குக் கொறிக்கக் கொடுத்தேன்.

'கழுதைகளை நமக்குத் தெரியும். ஆனால் கழுதைப் பால் எகிப்தியர் காலத்திலிருந்தே உபயோகத்திலிருக்கிறது என்ற விஷயம் நமக்குப் புதிது. பெரும்பாலும் மருத்துவத்திற்கும், அழகுக்கலை விஷயங்களுக்கும் பயன்பட்டு வந்திருக்கிறது. மற்றொரு விஷயம். பெரும்பாலான கழுதைகள் நாள் ஒன்றுக்கு இருநூறு முதல் நானூறு மில்லி அளவே பாலைக் கொடுக்கும். அதற்குமேல் இழுத்தால்! உதைதான் கிடைக்கும். 2001ம் ஆண்டுவரை அமெரிக்க விவசாயத்துறை (USDA) கழுதைப் பாலுக்கு அங்கீகாரமே வழங்கவில்லை. அதுமட்டுமில்லை. அமெரிக்காவில் கழுதைப் பாலை பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளவுமில்லை.

ஏற்றுக்கொள்ள தயக்கமானஒரு விஷயம் என்ன தெரியுமா! கழுதைப் பால் தாய்ப்பாலுக்கு இணையாகவும், சில நேரங்களில் அதை விட சிறப்பானதாகவும் இருக்கிறது என்பது தான் உண்மை. கழுதைப்பாலில் லாக்டோஸ் அதிகமாக காணப்படுகிறது. ‘அழுத புள்ள சிரிச்சுதாம். கழுதைப் பாலை குடிச்சுதாம்', என்ற நையாண்டிப் பாட்டை கேட்டிருக்கிறோம். அது உண்மையான விஷயம்தான். அழுத பிள்ளையை சிரிக்க வைக்கும் அளவிற்கு பாலில் சுவையைத் தருவது லாக்டோஸ். அதேபோல் கொழுப்புச் சத்து குறைந்த அளவில் காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை கழுதைப்பாலானது, தாய்பாலுக்கு மாற்றாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டு ராணி கிளியோபட்ராவைத் தெரியாதவர்களே இருக்க முடியாது. ஒன்றல்ல, இரண்டு சாம்ராஜ்ஜியங்களை ஆட்டிப்படைத்தது அவரின் அழகு. அதை பாதுகாத்துவந்தது கழுதைப்பால். ஜூலியஸ் சீசர் மற்றும் மார்க் ஆண்டனி என்ற பெரிய சக்கரவர்த்திகளை வளைத்துப்போட்டது இவரின் அழகு. இவர் தினமும் கழுதைப்பாலில்தான் குளிப்பாராம். அதனால்தான் அவரின் தோல் பளபளவென ஜொலித்ததாக சொல்லப்படுகிறது. ஒரு கழுதை அதிகபட்சமாக நானூறு மில்லிதான் கறக்கும் என்று படித்தோம். அதனால் ராணி குளிப்பதற்கு தினமும் குறைந்த பட்சம் எழுநூறு கழுதைகளின் சேவையாவது தேவைப்பட்டிருக்கும். ராணியார் குளிக்கத் தயாராகும் முன்பு எழுநூறு கழுதைகளும் ரெடியாக நிற்கவேண்டும். அப்படியானால் அதை கறப்பதற்கு எத்தனை ஆட்கள் வேண்டும்? இப்படியே கணக்குப்போட்டுக்கொண்டே போகலாம். இன்னொரு விஷயம். முதலையின் எருவை எடுத்து, கழுதைப்பாலில் கலந்து ஒரு பேஸ்ட் தயாரிப்பாராம் ராணியார். அதை முகத்தில் பூசிக்கொள்வாராம். இது முகத்துக்கு அதிக பொலிவைத் தருமாம். இந்த பிரயத்தனங்களின் போது மன்னர் ஜூலியஸ் சீசர் பக்கத்தில் இருக்கமாட்டாராம். அதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

கழுதைப் பாலை மருத்துவத்திற்கும் பயன்படுத்தி பலர் வெற்றி கண்டுள்ளார்கள். ஹிப்போகிரடஸ். இவரைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. மருத்துவத்தின் தந்தை என்றழைக்கப்படுபவர். கிரேக்கதேசத்தைச் சேர்ந்தவர். கி.மு 460 முதல் 370 வரை வாழ்ந்து பல சாதனைகளை நிகழ்த்தியவர். கல்லீரல் பிரச்னைகள், தொற்று நோய்கள், காய்ச்சல், நீர்க்கட்டிகள், மூக்கில் இரத்தம் வழிதல், விஷமுறிவு மற்றும் காயங்களுக்கு கழுதைப் பாலை மருந்தாக அளித்துள்ளார்.

கழுதைப்பால் ஊட்டச்சத்துமிக்கது மட்டுமல்ல. நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்டது. குறிப்பாக பாக்டீரியாக்களை அழிக்கும் வல்லமை பெற்றது. மலச்சிக்கல், தொண்டை பாதிப்பு, இழந்த சக்தியை மீண்டும் பெறுதல், தலைவலி, காசநோய், அல்சர் என்று நோய்களை அடுக்கிக்கொண்டே போகலாம். மொத்தத்தில் இது சர்வரோக நிவாரணியாக பண்டைய காலங்களில் பயன்பட்டிருக்கிறது.

உங்களுக்கு "மரிய எஸ்தர் தி கோபோவிலா" என்ற பெண்மணியைத் தெரியுமா? 1889ல் ஈகுவேடர் நாட்டில் பிறந்தவர். 27 ஆகஸ்ட் 2006ல் மறைந்தவர். அல்ப ஆயுசு. நூற்றி பதினாறு வருஷம், முன்னூத்தி நாற்பத்தி ஏழு நாட்கள் வாழ்ந்தார். கிட்டத்தட்ட நூற்றிப் பதினேழு வயது சிறுமி. அவருடைய நீண்ட ஆயுளின் ரகசியம் என்ன தெரியுமா! அவர் தினமும் கழுதைப்பால் குடிப்பாராம். இது அவரே சொன்னது. யாரும் சொன்ன கட்டுக்கதையல்ல. இவர் பெயரை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறச்செய்த பெருமை, கழுதைப்பாலைச்சேரும்.

கழுதைகளைச் சுற்றி நிறைய ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன. குறிப்பாக இத்தாலியின் யுனிவர்சிடி ஆப் நேபல் நடத்திய ஆராய்ச்சியின் முடிவுகள் எல்லோரையும் ஆச்சர்யத்தில் தள்ளியது. கழுதைப்பாலில் ஒமேகா 3

எண்ணெயும், கால்சியம் சத்தும் அதிகமாகக் காணப்படுகிறது. இது தோல் சுருக்கத்தை கட்டுப்படுத்துகிறது. வயது முதிர்வை தாமதப்படுத்துகிறது. ரத்தத்தில் உள்ள கொழுப்பை குறைக்கிறது. இதயத்திற்கு நல்லது. தேவையற்ற உடல் பருமனையும் குறைக்கிறது. உடல் எடையும் குறைகிறது என்று ஆராய்ச்சி முடிவுகள் தெளிவுபடுத்தின. ஆராய்ச்சியின் முடிவுகள் இஸ்தான்புலில் நடைபெற்ற European Congress on Obesity கூட்டத்தில் வைக்கப்பட்டது. விவாதங்களும் நடத்தப்பட்டன. பின்னர் கழுதைப்பால் உபயோகத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

ஜப்பான் நாட்டில் கழுதைப்பாலில் தயாரிக்கப்பட்ட குளியல் எண்ணை, குளியல் பவுடர், சோப்பு, செண்ட், என்று பல பொருட்கள் கடைவீதிகளும், இணைய தளங்களிலும் விற்பனைக்கு காத்திருப்பதை பார்க்க முடிகிறது. அதனால், இனிமே கழுதையையோ அதன் பாலையோ கிண்டல் பண்ணாதீங்க'.

சொல்லி முடித்தேன். ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. அமைதியாக நின்றுகொண்டிருந்தார்கள். மீண்டும் என் பேச்சை தொடர்ந்தேன்.

'பசங்களா, நான் சொல்வதையெல்லாம் பொறுமையாக கேட்டீங்க. குட் பாய்ஸ். நான் கொடுத்த பிஸ்கட் எப்படி இருந்தது?

'ரொம்ப நல்லா இருக்கு. எங்க வாங்கினீங்க', என்று கேட்டார்கள் சிறுவர்கள் கோரஸாக.

'நீங்க சாப்பிட்ட பிஸ்கட் இத்தாலியைச் சேர்ந்த ஆரலெட் என்ற புகழ்பெற்ற நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது. அது முழுமையாக கழுதைப்பாலில் தயாரிக்கப்பட்ட க்ரீம் பிஸ்கட். எளிதில் ஜீரணமாகக்கூடியது. மினரல், நார்ச்சத்து போன்றவை அதிக அளவில் காணப்படுகிறது. எல்லாவற்றையும் விட மிக முக்கியமன விஷயம் இதில் மிகக்குறைந்த அளவே கொழுப்பு காணப்படுகிறது. அதனால் இது ரொம்ப பிரபலம். யார்வேண்டுமானாலும் சாப்பிடலாம்'.

கழுதைப்பாலை அருவருப்பாக நினைத்த சிறுவர்கள் பதிலேதும் சொல்லாமல் அமைதியாக நின்றார்கள். அவர்கள் மனத்தில் இருந்த கழுதையைப் பற்றிய அருவருப்பான எண்ணத்தில் கொஞ்சமாவது மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று நம்புவோம்.

இவற்றையெல்லாம் படிக்கும்போது மனத்தில் தோன்றும் விஷயங்கள் என்ன தெரியுமா! கழுதைப்பால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்பட்டு வந்துள்ளது. அதன் பின் நடந்த ஆராய்ச்சிகள் அதன் மருத்துவ குணங்களையும் புரியவைத்தது. ஆனால் கழுதைப்பாலை சிறப்பான முறையில் நாம் பயன்படுத்த தவறிவிட்டோமோ என்ற நெருடல் மனத்தில் இருக்கத்தான் செய்கிறது. அதாவது இன்னும் அலசி ஆராயப்படவேண்டிய விஷயங்கள் அதில் நிறைய இருப்பது போன்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது.

கழுதையை நினைக்கும் போது மனத்தில் ஏற்படும் அருவருப்பைத் தவிர அதன் பாலில் வெறுக்கத்தக்க விஷயங்கள் ஏதுமில்லை என்பதும் புரிகிறது. கழுதைப்பால் டெங்கு காய்ச்சலுக்கு நல்லதா என்பதைப் பற்றித் தெரியாது. அதில் காணப்படும் நோய் எதிர்ப்பு சக்தி, நிச்சயமாக நல்ல பலனைத் தரும் என்று நம்பலாம். ஆனால் மேலை நாடுகளில் காணப்படுவதைப் போல, நம்ம ஊரிலும் கழுதைப் பண்ணைகள் தொடங்கப்பட்டு, அதன் மருத்துவ குணங்கள் மேலும் தெரியவருமானால், அருவருப்பு மறையும்.

சரி. கழுதைக்காரரை நோக்கி நம் பார்வையை மீண்டும் திருப்புவோம்.

'கழுதைப்பால். கழுதைப்பால். டெங்கு காய்ச்சலுக்கு நல்ல மருந்து', என்று கூவிக்கொண்டே நடக்கத்தொடங்கினார் கழுதைக்காரர்.

'அதெல்லாம் சரி. நீங்க எப்ப பால் வாங்கறது. நான் எப்ப குடிக்கறது', என்ற ஏக்கம் கலந்த பார்வையோடு சுற்றியிருந்தவர்களை பார்த்துக் கொண்டிருந்தது குட்டி. மனிதர்களுக்கு கழுதைப்பால் எவ்வளவு முக்கியமோ அதைவிட அதன் குட்டிக்கு முக்கியம். இதை கழுதைக்காரர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. குட்டி அவரைத் தொடர்ந்து நடக்கத் தொடங்கியது.

எது எப்படியோ! கழுதைக்காரரே, உம்மை லட்சாதிபதியாக்காமல் விடப்போவதில்லை என்று உத்வேகத்தோடு எழுதத் தொடங்கினேன். முடித்தும் விட்டேன்.

Wishing You All A Happy Pongal!

NIA

The New India Assurance Co. Ltd.

(A Govt. of India Undertaking)

Japan Regional Office: STEC Joho Bldg., 22F

1-24-1, Nishi-Shinjuku, Shinjuku-ku TOKYO 160-0023

Services:

・Fire Insurance	**・Movable All Risks**
・Householder's Insurance	**・Personal Accident**
・Motor Insurance	**・Liability Insurance**
・Marine Cargo Insurance	**・Overseas Travel PA**

NEW INDIA ASSURANCE

	Branches :		Sub Branches :	
Tokyo	**Hiroshima**	**Okayama**	**Asahikawa**	
Nagoya	**Sapporo**		**Gifu**	**Iwakuni**
Osaka	**Himeji**		**Fukuyama**	**Shimonoseki**

RESOURCE PERSONS FOR RELATIONSHIP

Asaithambi R.	**S.Pradhan.**	**Ram Chakrabarty**
Dy.CEO	CEO	Branch Manager
Regional Office,Tokyo	Regional Office,Tokyo	Osaka
03-5326-7603	03-5326-7587	06-6262-5471
dy.ceo-hor@newindia.co.jp	ceo@newindia.co.jp	ram@newindia.co.jp

Please visit us at ***www.newindia.co.jp***

கல்லணை

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழகத்தை ஆண்ட கரிகால சோழன் காவிரியில் அடிக்கடி பெருவெள்ளம் வந்து மக்கள் துயரப்பட்டதைக் கண்டு அதைத் தடுக்க காவிரியில் ஒரு பெரிய அணையைக் கட்ட முடிவெடுத்தான். ஆனால், அது சாதாரண விஷயம் அல்லவே . ஒரு நொடிக்கு இரண்டு லட்சம் கனஅடி நீர் பாயும் காவிரியின் தண்ணீர் மேல் அணைக்கட்டுவதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள் தமிழர்கள் .

நாம் கடல் தண்ணீரில் நிற்கும்போது அலை நம் கால்களை அணைத்துச் செல்லும். அப்போது பாதங்களின் கீழே குறுகுறுவென்று மணல் அரிப்பு ஏற்பட்டு நம் கால்கள் இன்னும் மண்ணுக்குள்ளே புதையும் . இதைத்தான் சூத்திரமாக மாற்றினார்கள் அவர்கள் . காவிரி ஆற்றின் மீது பெரிய பெரிய பாறைகளைக் கொண்டுவந்து போட்டார்கள் . அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் போகும் . அதன் மேல் வேறொரு பாறையை வைப்பார்கள்

நடுவே தண்ணீரில் கரையாத ஒருவித ஒட்டும் களி மண்ணைப் புதிய பாறைகளில் பூசிவிடுவார்கள் . இப்போது இரண்டும் ஒட்டிக்கொள்ளும் . இப்படிப் பாறைகளின் மேல் பாறையைப் போட்டு, படுவேகத்தில் செல்லும் காவிரி நீர் மீது கட்டிய அணைதான் கல்லணை

ஆங்கிலப் பொறியாளர் சர் ஆர்தர் காட்டன் தான் இந்த அணையைப் பற்றிப் பலகாலம் ஆராய்ச்சி செய்து இந்த உண்மைகளைக் கண்டறிந்தார் . காலத்தை வென்று நிற்கும் தமிழனின் பெரும் சாதனையைப் பார்த்து வியந்து அதை ' தி கிராண்ட் அணைக்கட் ' என்றார் சர் ஆர்தர் காட்டன் . அதுவே பிறகு உலகமெங்கும் பிரபலமாயிற்று .

உலகிற்கு பறைச்சாற்றுவோம் தமிழனின் பெருமைகளை.. கண்டிப்பாக ஒவ்வொரு தமிழனுக்கும் தெரிய வேண்டிய செய்தி

மசாலாக் காரன்

ポンガロー、ポンガル！

僕の名前は武田尋善（Takeda Hiroyoshi）といいます。僕は Drawing と Painting のアーティストをしています。そして、友達の鹿島信治（Kashima Shinji）と一緒にインド料理ユニット『マサラワーラー』をやっています。インド料理の中でも、南インドの、特にタミル・ナードゥ州の料理が一番好きなので、名前はマサラワーラーよりも『マサラーッカーラン』のほうが良かったかもしれません。

பொங்கலோ பொங்கல்

எனது பெயர் தகேதா ஹிரோயோஷி. தொழில் முறையில் நான் ஒரு வரைகலைஞன். அன்புத்தோழன் கஷிமா ஷின்ஜியுடன் சேர்த்து [மசாலாவாலா] என்ற இந்திய உணவு க்குழு ஒன்றை நடத்தி வருகிறோம். இந்திய உணவுவகைகளிலும் குறிப்பாக தமிழ் உணவுவகைகளையே நாங்கள் விரும்புவதால் மசாலாக்காரன் என்று பெயர் வைத்திருக்கலாமோ என்று தோன்றுகிறது.

僕たちはお店はありませんが、いろいろなイベントや、パーティーでケータリングをやっています。バナナの葉っぱを用意してミールスをサーブして、手で食べてもらいます。

多くの日本人は、インド料理といえばナーンとかチキンカレー、タンドーリーチキンを思い浮かべます

でも、僕たちのお客さんは初めて食べるミールスを喜んで食べてくれます。日本人はご飯を食べるので、本当は南インド料理の方が好きなんです。

そして、日本でヒットしたインド映画は、ラジニカーントの映画です。ボリウッドの映画よりもラジニカーントの映画のほうが有名です。日本では 1998 年に Muttu が大ヒットしました。

ஒட்டல்வைத்து நடத்தவில்லை என்றாலும் விருந்துகளுக்கு உணவு சமைத்துப்பரிமாறும் வேலையை செய்து வருகிறோம். வாழையிலை மீது முழுச்சாப்பாடு தயார் செய்து கையால் சாப்பிடச்சொல்கிறோம் பெரும்பான்மையான ஜப்பானியர்களுக்கு இந்திய உணவென்றாலே நான்,சிக்கன் கறி, தந்தூரிசிக்கன் தான் நினைவுக்கு வரும். நாங்கள் தயாரித்துப்பரிமாறுகிற மீல்ஸ் சாப்பாட்டை ஆர்வத்துடன் சாப்பிட்டு மகிழ்கின்றனர்,. ஜப்பானியர்களுக்கும் அரிசி தான் பிரதான உணவு என்பதால்,தென்ன்னிந்திய உணவு வகைகள்தான் அவர்களுக்கு மிக விருப்பம். இன்னமும் சொல்லப்போனால், ஜப்பானில் பிரபலமானது ரஜினிகாந்த் திரைப்படங்கள் தான். ஹாலிவுட் திரைப்படங்களைவிட ரஜினிகாந்த் திரைப்படங்கள் தான் பிரபலம் 1998இல் முத்து கொடிகட்டிப்பறந்தது.

ぼくが初めてインドに行ったのは 1997 年。学校でヒンディー語を勉強していたので、夏休みには初めてインドへ旅行しました。マドゥライのミーナークシー寺院の写真を見て、どうしても南インドに行きたくなり、タミルナードゥに行きました。ヒンディー語は全然役に立たなかったけれど、訪れた南インドはとても魅力的でした。

美しい寺院、美味しい食べ物、明るくて楽しい人々、全部大好きになりました。

それから何度もインドに行きましたが、必ず南インドに行きました。

ムトゥが日本でヒットすると、ダラパティ、パダヤッパ、バーシャ、ヴィーラ、チャンドラムキ…と続々と公開されました。

ぼくはすっかりラジニカーントのファンになり、インド旅行中にラジニの物まねをして、タミルの人々と仲良くなりました。

長い間、インドに行かない期間がありましたが、そのときに Painting と音楽のコラボレーションのパフォーマンスをしていました。

そのパフォーマンスで、ミュージシャンの鹿島信治と出会いました。

彼がインド料理に興味を持ったので、ひさしぶりに作りました。

２人で競争して作るのが楽しくなり、料理を作りすぎるようになりました。

それで、マサラワーラーを結成しました。

インド料理への興味からインドへの興味が再び湧き、またチェンナイに行きました。

நான் முதன்முதலில் இந்தியா சென்றது 1997.இல். பள்ளியில் இந்திமொழி கற்றுக்கொண்டிருந்ததால் கோடை விடுமுறைக்கு இந்தியா சென்றேன். மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் படங்களைப்பார்த்த பிறகு அவசியம் தென்னிந்தியா செல்லவேண்டும் என்று ஆசைப்பட்டு தமிழ் நாட்டுக்குச்சென்றேன். . கற்றுக்கொண்ட இந்தி சுத்தமாக பலன் தரவில்லை என்றாலும் மதுரையின் கவர்ச்சி என்னைச்சுண்டி இழுத்தது. அழகான கோவில், சுவையான உணவு, இனிமையாகப்பழகும் மக்கள், எல்லாமே மிகவும் பிடித்துப்போய்விட்ட்து. அதன்பிறகு , பல முறை இந்தியாவுக்கு போய்வந்துவிட்டேன் - கண்டிப்பாக தென்னிந்தியாவும்...

முத்து ஹிட்டான பிறகு ஜப்பானில் தொடர்ச்சியாக தளபதி, படையப்பா, பாட்ஷா, வீரா, சந்திரமுகி, என்று ரஜினி படங்கள் திரையிடப்பட்டன. நானும் ரஜினிகாந்தின் தீவிர ரசிகன் ஆகி, இந்தியாசெல்லும் போதெல்லாம் ரஜினி ஸ்டைல்செய்து தமிழர்களுடன் நெருக்கமாக பழக முடிந்தது. சிலகாலம் இந்தியாவுக்குச்செல்லமுடியாத நிலைமை. அப்பொதெல்லாம் ஓவியம்-இசை கூட்டுமுயற்சிகளில் ஈடுபட்டிருந்தேன். அப்படித்தான் நண்பன் கஷிமா ஷின்ஜி அறிமுகமானார். இந்திய உணவுகளில் அவருக்கும் நாட்டம் இருந்த காரணத்தால் நீண்ட நாட்களுக்குப்பிறகு சமைத்தேன், இருவரும் போட்டிபோட்டுக்கொண்டு சமைத்ததில் தேவைக்கு அதிகமாக சமைக்கத்துவங்கினோம்.

அப்படித்தொடங்கியதுதான் மசாலாவாலா. இந்திய உணவின்மீதான நாட்டம் இந்தியாவின்மீதும் தொற்றிக்கொண்டு மறுபடியும் சென்னை பயணம்.

そして、マサラワーラーのイベントを、マハーバリプラムでやりました。『日本人がタミルに行って、タミル人がいつも食べている料理を作る。』というイベント。評価が不安でしたが、食べた人は「美味しい」「いつも食べている味だ！」と言ってくれました。

とてもうれしかったです！

そのときの様子が新聞の『The Hindu』にも載りました。

今、ぼくはタミル語の勉強をしています。難しいですが、日本語に似ているところが沢山あって、ビックリします。

タミル語でラジニのセリフを覚えるのも勉強になります。例えば…

『Naan Oru tadavai sonna,Nur tadavai sonna maadiri!』

僕たちは日本でインドのお祭り（ポンガルや、ディーパヴァリ等）に合わせて、南インド料理と南インドの芸能を合わせたイベントなどもやっています。

